**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 22–ஆம் நாள் புதன் கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 06–ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண்.115/2015</u>**
(CNR.No.TNTS07–000165–2015)
* * * * * * * * *

1. சரஸ்வதி (இறப்பு)
2. அய்யப்பன் . . . வாதிகள்

/எதிர்/

1. மனோன்மணி
2. குருசாமி ..... பிரதிவாதிகள்

*(இறந்துபோன 1 ஆம் வாதியின் வாரிசாக 2 ஆம் வாதி இடைநிலை மனு எண்.04/2025–ல் கடந்த 09.07.2025 அன்று பிறந்த உத்தரவின்படி* வழக்குரை சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

(இடைநிலை மனு எண்.03/2025 இல் 21.04.2025 அன்று பிறந்த உத்தரவின்படி வழக்குரை சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

(இடைநிலை மனு எண்.05/2025 இல் 27.02.2026 அன்று பிறந்த உத்தரவின்படி வழக்குரை தபசில் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கானது கடந்த 09.06.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, 1ம் வாதி இறந்துவிட்ட நிலையிலும், 2ம் வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.ஏ.ராமராஜ் மற்றும் சி.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்.எஸ்.முருகேசன் மற்றும் திருவாளர்.எஸ்.எம்.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

(i) இந்த வழக்கானது 1வது தபசில் சொத்தானது 1ஆம் வாதியின் வாரிசான 2ஆம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யவும், அதனை தொடர்ந்து 2வது தபசில் சொத்தில் 1ஆம் பிரதிவாதி அத்துமீறி குடியிருந்து வருவதை காலி செய்து 2ஆம் வாதி வசம் சுவாதீனத்தை கொடுக்க வேண்டி சுவாதீன பரிகாரம் கோரியும், 3ஆம் தபசில் சொத்தில் வாதிகள் குடியிருந்து அனுபவம் செய்து வருவதை 2ஆம் பிரதிவாதியோ அவரது வாரிசுகளோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) **பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கை:**

எதிர்கோரிக்கை தபசில் 1வது சோத்தின் ஒரு பகுதியான 3வது தபசில் சொத்து 2ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யவும், 3வது தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பாளர்களாக இருந்து வரும் வாதிகள் 3வது தபசில் சொத்தை காலி செய்து 2ஆம் பிரதிவாதி வசம் தனது சுவாதீனத்தை கொடுக்கவேண்டி சுவாதீன பரிகாரம் கோரியும் எதிர்கோரிக்கை பாத்தியம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **சீர்திருத்தம் செய்யப்பட்ட வழக்குரை மற்றும் வாதிகள் தரப்பு பதிலுரையின் சுருக்கம்**

தபசில் சொத்துக்களும் வேறு சொத்துக்களும் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரியின் தந்தையான நாராயண ஆசாரிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்களை நாராயண ஆசாரி மற்றும் மேற்படியாரின் மூன்று ஆண் மக்களான சிவசுப்பிரமணிய ஆசாரி கருப்பையா ஆசாரி, 1ம் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரி ஆகியோர்கள் கடந்த 05.09.1976ஆம் ஆண்டில் குடும்ப பாக கைத்தடிஆவணம் மூலம் பிரிவினை செய்துகொண்டதில் தபசில் சொத்துக்கள் 1ம் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு தபசில் சொத்துக்களை பொன்னுச்சாமி ஆசாரியே ஆண்டு அனுபவம் செய்து வந்தார்.

2.2. 1வது தபசில் சொத்து பிராது வரைபடத்தில் ABCD பகுதியாகும். AEFG பகுதி 2வது தபசில் சொத்தாகும். EBHF பகுதி 3ம் தபசில் சொத்தாகும். தபசில் சொத்துக்களில் 3ம் தபசில் வீட்டில் பொன்னுச்சாமி ஆசாரியும் மேற்படியாரின் மனைவியுமான 1ம் வாதியும் குடியிருந்துகொண்டு 2ம் தபசில் சொத்தான கதவு எண் ஏற்படாத வீட்டில் பொருட்கள் போட்டும் அனுபவம் செய்து வந்தார்கள். 3ம் தபசில் வீட்டின் கதவு எண்.14 ஆகும். மேற்படி கதவு எண்ணுள்ள வீட்டிற்கு பொன்னுச்சாமி ஆசாரி பெயரிலேயே வரி செலுத்தப்பட்டு வந்தது. 2ம் தபசில் வீட்டிற்கு கதவு எண் ஏற்படாமல் இருந்து வருகிறது.

2.3. மேற்படி பொன்னுச்சாமி ஆசாரிக்கும், 1ம் வாதிக்கும் யாதொரு புத்திர பாக்கியம் இல்லாததால் மேற்படி இருவரும் 2ம் வாதியை சுவீகார புத்திரனாக தத்து எடுத்து வளர்த்து இதன் தபசில் சொத்துக்களில் குடியிருந்து மேற்படி 1ம் வாதியும் மேற்படியாரின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரியும் ஆண்டு அனுபவம் செய்து வந்தனர். பின்பு பொன்னுச்சாமி ஆசாரியும், 1ம் வாதியும் மேற்படி சொத்துக்களில் உள்ள வீடுகளை பூட்டி வைத்துவிட்டு பிழைப்பு நாடி ராஜபாளையம் வட்டம், செட்டியார்பட்டி கிராமத்தில் குடியிருந்து வந்தார்கள். 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்கள் இருக்கும் தெருவில் குடியிருந்து வந்தார். 1ம் வாதியும் மேற்படியாரின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரியும் தபசில் சொத்துக்களில் இல்லை. 1ம் பிரதிவாதி, பிராது 2ம் தபசில் வீட்டின் பூட்டை உடைத்து அத்துமீறி 1ம் வாதி மற்றும் அவரது கணவரின் உடைமைகளை அப்புறப்படுத்திவிட்டு மேற்படி சொத்தில் கடந்த 1995ம் வருடம் குடியேறிவிட்டார். அது சம்மந்தமாக 1ம் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரி காவல்நிலையத்தில் 19.01.1995ம் தேதியில் புகார் கொடுத்தும், காவல்நிலையத்தாரால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2.4. இந்நிலையில் 1ம் பிரதிவாதி, 1ம் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரிக்கு கடந்த 10.03.1995ஆம் தேதியில் அனுப்பிய அறிவிப்பில் 1ம் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரி 1ம் பிரதிவாதியை காதலித்து திருமணம் செய்து கொண்டதாகவும், தபசில் சொத்துக்களை மேற்படி பொன்னுச்சாமி ஆசாரி வில்லங்கம் செய்யக்கூடாது என அனுப்பியிருந்தார். மேற்படி அறிவிப்புக்கு

பொன்னுச்சாமி ஆசாரியும் பதில் அறிவிப்பு 23.03.1995 ஆம் தேதியில் அனுப்பியுள்ளார். இந்நிலையில் பொன்னுச்சாமி ஆசாரி மேற்படியாரின் மனைவியான 1ம் வாதி பெயருக்கு கடந்த 18.09.2006 ஆம் தேதியில் தபசில் சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு பெற்ற செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்து மேற்படி தபசில் சொத்துக்களின் அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டார். மேற்படி பதிவு செட்டில்மெண்ட் ஆவணத்தை 1ம் வாதி ஏற்றுக்கொண்டு வரி மாற்றம் செய்து தீர்வை முதலியன செலுத்தி வருகின்றார். 1ம் பிரதிவாதி, 2ம் தபசில் வீட்டின் பூட்டை உடைத்து அத்துமீறி குடியிருந்து வருவதை காலி செய்து ஒப்படைக்கும்படி 1ம் வாதி கடந்த 09.09.2008 ஆம் தேதியில் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதியும் பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு கடந்த 18.09.2008 ல் அனுப்பினார்.

2.5. பின்பு 1ம் வாதியின் கணவரான பொன்னுச்சாமி ஆசாரி கடந்த 18.10.2010 ஆம் தேதியில் காலமான பின்பு வாதிகள் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.261/2010 வழக்கினை 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்தனர். மேற்படி வழக்கு கடந்த 10.11.2014 ஆம் தேதியில் முழு விசாரணைக்கு பின் வாதிகள் தபசில் சொத்தில் குடியிருந்து வரவில்லை என்பதால் வழக்கில் வாதிகள் கோரிய நிரந்தர ஏவுகட்டளை தள்ளுபடி செய்யப்பட்டதுடன் 1ம் பிரதிவாதி கோரிய எதிரிடை அனுபவ பாத்திய உரிமையும் நிராகரிக்கப்பட்டன. அதன் பின்னர் வாதிகள் தபசில் சொத்துக்களில் இருந்த பழுதடைந்த ஓட்டை பிரித்தெடுத்து சிமெண்ட் ஓடு போட்டு மேற்படி 3ம் தபசில் சொத்தில் வாதிகள் கடந்த 2011 ஆம் ஆண்டு இறுதி முதல் குடியிருந்து வருகின்றார்கள். மேற்படி வீட்டின் வரிவிதிப்பும் 1ம் வாதியின் பெயரில் ஏற்பட்டு 1ம் வாதியே வரி செலுத்தி அனுபவித்து வருவதுடன் 1ம் வாதிக்கு செட்டியார்பட்டி கிராமத்தில் வழங்கப்பட்ட குடும்ப அட்டையும் தபசில் சொத்துக்கு வருவாய்துறை மூலம் மாற்றம் செய்யப்பட்டு 3ம் தபசில் சொத்தில் குடியிருந்து வருகின்றார். 1ம் பிரதிவாதி பிராது 2ம் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பாளர் என்ற முறையில் குடியிருந்து வருகின்றார். 1ம் பிரதிவாதிக்கும், 2ம் தபசில் சொத்துக்கும் எந்தவித உரிமையும் கிடையாது. மேற்படி 2ம் தபசில் சொத்திலிருந்து மேற்படி 1ம் பிரதிவாதி காலி செய்து

வாதிகள் வசம் மேற்படி சொத்தை ஒப்படைக்க வேண்டியது சட்டப்படியான கடமையாகும்.

2.6. ஆனால் 1ம் பிரதிவாதி தபசில் சொத்தில் வாதிகளின் உரிமையை மறுத்து வருவதுடன், இந்த வாதிகள் 1ம் பிரதிவாதியை, 2ம் தபசில் சொத்திலிருந்து காலி செய்ய 01.09.2015 ஆம் தேதியில் கேட்டு வந்தபோது, பிரதிவாதிகள் மேற்படி சொத்திலிருந்து காலி செய்ய மறுப்பதுடன், பிரதிவாதிகள் மோசடி கூட்டு சேர்ந்து கொண்டு 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துள்ளது போல் கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு, 2ம் தபசில் சொத்திலிருந்து 1ம் பிரதிவாதி காலி செய்ய முடியாது என கூறிக்கொண்டு வாதிகள் குடியிருந்து வரும் 3ம் தபசில் சொத்தினையும் காலி செய்து கொடுக்கும்படி கடந்த 20.09.2015 ஆம் தேதி முதல் மிரட்டி வருகிறார்கள். எனவே இந்த வழக்கு.

3. **<u>பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கையின் சுருக்கம் (Counter Claim)</u>**

பிராது 1ம் தபசில் சொத்து வாதிகள் வழக்குரையில் கூறும் பொன்னுச்சாமி ஆசாரிக்கும் அவர் குடும்பத்தில் 05.09.1976 ஆம் தேதியில் நடந்த பாக கைத்தடி மூலமான பாகத்தில் கிடைத்தது. அதுமுதல் மேற்படி சொத்தை மேற்படி பொன்னுச்சாமி ஆசாரி ஆண்டனுபவம் செய்து வந்தார். மேற்படி பொன்னுச்சாமி ஆசாரிக்கு 1ம் வாதியை முதலில் திருமணம் செய்யப்பட்டிருந்தது. பொன்னுச்சாமி ஆசாரிக்கும், 1ம் வாதிக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. மேற்படியார்கள் இருவரும் 1991ம் வருடத்தில் இருந்து பிரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் 2ம் வாதியை எப்போதும் சுவீகார புத்திரனாக எடுத்து வளர்த்ததும் இல்லை.

3.2. பின்பு பொன்னுச்சாமி ஆசாரி 1ம் வாதியுடன் நடந்த திருமண உறவினை ரத்து செய்து 1994ம் வருடத்தில் 1ம் பிரதிவாதியை காதலித்து கலப்பு திருமணம் செய்து கொண்டார். மேற்படி திருமணத்தின்போதே, பொன்னுச்சாமி ஆசாரி, 1ம் பிரதிவாதியின் மீது கொண்டிருந்த அன்பினால் 1ம் தபசில் சொத்தை முழுவதையும் வாய்மொழி கொடையாக கொடுத்து 1ம் தபசில் சொத்தின் அனுபவத்தையும் 1ம்

பிரதிவாதி வசம் ஒப்படைத்துவிட்டார். 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தின் சுவாதீனத்தை முழுமையாக பெற்றுக்கொண்டு சொத்து வரி மற்றும் மின் கட்டணம் முதலியவை செலுத்தி 1994ம் வருடம் முதல் 2ம் பிரதிவாதிக்கு பிராது 1ம் தபசில் சொத்தை கிரையம் கொடுத்த காலமான 20.05.2015 ஆம் தேதி வரை அனுபவம் செய்து வந்தார். பிராது 1ம் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழி கொடை மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்ததற்கு பின்னிட்டு மேற்படி விபரத்தை மறைத்து அதனை பிற நபர்களுக்கு பாராதீனப்படுத்த முயற்சித்ததால் அதனை ஆட்சேபித்து 1ம் பிரதிவாதி பொன்னுச்சாமி ஆசாரிக்கு 10.03.1995ல் ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதற்கு பொன்னுச்சாமி ஆசாரி 23.03.1995ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதில் 1ம் பிரதிவாதி 1ம் தபசில் சொத்தில் குடியிருந்து வருவதை ஒப்புக்கொண்டுவிட்டு மற்ற சங்கதிகளை பொய்யாக கூறியுள்ளார்.

3.3. பொன்னுச்சாமி ஆசாரி பிராது 1ம் தபசில் சொத்தை 1ம் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தது போல் 1ம் வாதியே மோசடியாக 18.09.2006 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவண்ம் சட்டப்படி செல்லாத ஆவணமாகும். 1ம் வாதி, 1ம் பிரதிவாதியை காலி செய்ய சொல்லி 09.09.2006ல் அறிவிப்பு அனுப்பியிருந்தார். அதற்கும் 1ம் பிரதிவாதி உண்மையான விபரங்களை தெரிவித்து 18.09.2008ல் ஒரு பதில் அறிவிப்பு 1ம் வாதிக்கு அனுப்பியுள்ளார். பின்னர் பொய்யான விபரங்களை தெரிவித்து 2ம் வாதியுடன் சேர்ந்து 1ம் பிரதிவாதி மீது சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.261/2010 தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கில் 1994ம் வருடம் முதல் பிராது 1ம் தபசில் சொத்தை வழக்கு தீர்ப்பு காலம் வரை 1ம் பிரதிவாதியே தொடர்ந்து அனுபவித்து வரும் விபரம் கண்டு மேற்படி வழக்கு முழுமையான விசாரணைக்கு பின்னர் 10.11.2014ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து வாதிகள் தரப்பில் எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை.

3.4. 1994ம் வருடத்தில் இருந்து 1ம் பிரதிவாதி வாய்மொழி நன்கொடையின் அடிப்படையில் பிராது 1ம் தபசில் சொத்தில் உரிமையுடன்

குடியிருந்தும், பொன்னுச்சாமி ஆசாரி மற்றும் வாதிகளை விலக்கி எவ்வித ஆட்சேபனையும் இன்றி சொத்துவரி மற்றும் மின் கட்டணம் ஆகியவை செலுத்தியும் ஆண்டனுபவம் செய்து வந்துள்ள நிலையில், 1ம் பிரதிவாதிக்கு பிராது 1ம் தபசில் முழுவதிலும் சிறந்த எதிரிடை அனுபவ பாத்தியதை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் பிரதிவாதி சரியான பிரதிபிரயேஜனத்திற்கு 2ம் பிரதிவாதிக்கு பிராது 1ம் தபசில் சொத்து முழுவதையும் 20.05.2015 ஆம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு 20.05.2015 ஆம் தேதிய கிரையத்திற்கு கொடுத்த கிரைய தொகையில் இருந்து ரூ.1,40,000/யை மேற்படி 20.05.2015 ஆம் தேதியிலேயே 1ம் பிரதிவாதியிடமிருந்து கடனாக பெற்றுக்கொண்டு அதன் வட்டிக்கு ஈடாக தபசில் சொத்துக்களில் 2 வருடங்களுக்கு 1ம் பிரதிவாதியை குடியிருந்து வர அனுமதித்துள்ளார். பின்பு பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து 20.05.2015 ஆம் தேதியில் ஒரு ஒத்தி ஆதரவும் பிறப்பித்து கொண்டுள்ளனர்.

3.5. பிராது சொத்துக்களை 1ம் பிரதிவாதி மேற்படி கடன் தொகை ரூ.1,40,000/-த்தின் வட்டிக்கு ஈடாக ஒத்தி பாத்தியமாய் 20.05.2015 ஆம் தேதி முதல் அனுபவித்து வரும் நிலையில் பிரதிவாதிகள் வெளியூருக்கு வேலைக்கு சென்றிருந்த சமயத்தில் பிரதிவாதிகளுக்கு தெரியாமல் வாதிகள், பிராது 3ம் தபசில் சொத்தில் 16.10.2015 ல் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்து குடியிருந்து வருகிறார்கள். பிராது தபசில் சொத்துக்களை பொருத்த முந்தைய அசல் வழக்கு எண்.261/2010 ன் தீர்ப்பின் காரணமாக தாவா வழக்கும் முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. தாவா வழக்கை காரணம் காட்டி வாதிகள் பிராது 3ம் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் என்ற நிலையில் வருகிறார்கள். அதனால் பிராது 3ம் தபசில் சொத்தில் இருந்து வாதிகளை அப்புறப்படுத்திக்கொள்ள 2ம் பிரதிவாதி, 3ம் தபசில் சொத்தை பொறுத்து வாதிகள் மீது விளம்புகை மற்றும் சுவாதீனப்பரிகாரம் கோரி எதிர்கோரிக்கையுடன் இந்த எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. **<u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

பொன்னுச்சாமி ஆசாரியும், 1ம் வாதியும் 2ம் வாதியை சுவீகார புத்திரனாக தத்து எடுத்து வளர்த்து வந்தனர் என்று குறிப்பிட்டுள்ளதும் முற்றிலும் தவறானது. 2ம் வாதியை பொன்னுச்சாமி ஆசாரியும், 1ம் வாதியும் எப்போதும் சுவீகார புத்திரனாக தத்து எடுத்தது இல்லை. அதற்கான சாட்சியங்களோ, ஆவணங்களோ 2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி 01.02.2025 இல் இறந்துவிட்டார் என்பது உண்மை. அவருக்கு 2ம் வாதி எந்த வகையிலும் வாரிசு இல்லை. 1ம் வாதியும், பொன்னுச்சாமி ஆசாரியும், 2ம் வாதியை சுவீகாரம் எடுத்துக்கொண்டதற்கு எழுத்து மூலமான ஆவணம் இல்லை. 2ம் வாதியின் பெற்றோர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்து 2ம் வாதியை சுவீகாரம் கொடுத்தை பற்றி நிரூபிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொன்னுச்சாமி ஆசாரி பிறப்பித்து கொடுத்த 18.09.2006 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2ம் வாதியை சுவீகார புத்திரன் என்று குறிப்பிடவும் இல்லை. இறந்துபோன 1ம் வாதிக்கு மனுதாரர் சுவீகார புத்திரன் இல்லை. அதனால் 2ம் வாதி இறந்துபோன 1ம் வாதிக்கு சட்டப்படியான வாரிசும் இல்லை. 1ம் வாதியின் பேரிலான மோசடி செட்டில்மெண்ட் ஆவணத்திலும் 2ம் வாதிக்கு 1ம் வாதியின் ஆயுளுடனோ, அதற்கு பின்போ எந்தவித பாத்தியதையும் கொடுக்கப்படவும் இல்லை. 1ம் வாதியின் வாரிசு நிலமையில் 2ம் வாதிக்கு பிராது சொத்தில் எந்த வகையிலும் பாத்தியம் இல்லை. எனவே வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5. இவ்வழக்கில், வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கின் தீர்வுக்காக கடந்த **<u>19.08.2017</u>** அன்று கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**<u>எழுவினாக்கள்</u>:**

| | |
|---|---|
| 1. | Whether it is true that the first schedule of property absolutely belongs to the first plaintiff? |
| 2. | Whether the first plaintiff is entitled to the relief of declaration of title as prayed for? |

| | |
|---|---|
| 3. | Whether the first plaintiff is entitled to the relief of recovery of possession as regards the $2^{nd}$ schedule of property? |
| 4. | Whether it is true that the $3^{rd}$ schedule of property has been under the exclusive possession and enjoyment of plaintiffs? |
| 5. | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction as regards the $3^{rd}$ schedule of property? |
| 6. | To what other relief, the plaintiffs are entitled to? |

6. இன்று இவ்வழக்கானது தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கில், வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை ஆகியவைகளை பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தால் மேற்கண்ட எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

**<u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்:</u>**

| | |
|---|---|
| 1. | வாதிகளின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா? |
| 2. | வாதிகளின் வழக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளதா? |
| 3. | 1வது தபசில் சொத்து 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டதென 2ம் வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 4. | 2வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 5. | 3வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 6. | 2ம் பிரதிவாதிக்கு 3வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |

| | |
|---|---|
| 7. | 2ம் பிரதிவாதிக்கு 3வது தபசில் சொத்தை பொறுத்து சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 8. | வேறு பரிகாரங்கள் என்ன? |

7. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், முதலில் 1ம் வாதி சரஸ்வதி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் வாதிகள் தரப்பில் 2ம் வாதி அய்யப்பன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு மேற்படியார் மூலம் வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி மனோன்மணி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி குருசாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் பி.வா.சா.ஆ.13 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன.

8. **திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்.1 முதல் 7 க்கான தீர்வு:**

(i) இந்த வழக்கானது 1வது தபசில் சொத்தானது 1ஆம் வாதியின் வாரிசான 2ஆம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யவும், அதனை தொடர்ந்து 2வது தபசில் சொத்தில் 1ஆம் பிரதிவாதி அத்துமீறி குடியிருந்து வருவதை காலி செய்து 2ஆம் வாதி வசம் சுவாதீனத்தை கொடுக்க வேண்டி சுவாதீன பரிகாரம் கோரியும், 3ஆம் தபசில் சொத்தில் வாதிகள் குடியிருந்து அனுபவம் செய்து வருவதை 2ஆம் பிரதிவாதியோ அவரது வாரிசுகளோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) **பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கை:** எதிர்கோரிக்கை தபசில் 1வது சோத்தின் ஒரு பகுதியான 3வது தபசில் சொத்து 2ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யவும், 3வது தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பாளர்களாக இருந்து வரும் வாதிகள் 3வது தபசில் சொத்தை காலி செய்து 2ஆம் பிரதிவாதி வசம் தனது

சுவாதீனத்தை கொடுக்கவேண்டி சுவாதீன பரிகாரம் கோரியும் எதிர்கோரிக்கை பாத்தியம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8.2. வாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் பரிசீலனையிலிருந்து வாதிகள் தரப்பு வழக்கு யாதெனில், வாதிகள் தரப்பில் தபசில் சொத்தானது பொன்னுச்சாமி ஆசாரிக்கு வா.சா.ஆ.1, 05.09.1976 ஆம் தேதிய குடும்ப பாக கைத்தடி ஆவணத்தின் மூலம் கிடைக்கப்பெற்றது என்பதும், மேலும் தபசில் 2 வது மற்றும் 3 வது தபசில் சொத்துக்கள் 1 வது தபசில் சொத்தின் ஒரு பகுதியாகும் என்பதும், 3 வது தபசில் சொத்தினை வாதிகள் அனுபவம் செய்து வந்தனர் என்பதும், இந்நிலையில் கடந்த 1995 ஆம் வருடம் பிரதிவாதிகள் 2 வது தபசில் சொத்தில் அத்துமீறி குடியேறி விட்டனர் என்பதும், மேலும் பொன்னுச்சாமி ஆசாரி அவரது மனைவியான 1 ஆம் வாதிக்கு 1 வது தபசில் சொத்தினை வா.சா.ஆ.2, 18.09.2006 ஆம் தேதிய பதிவு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாதியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்பதும், வாதிகள் பிரதிவாதிகளை சொத்தினை காலி செய்து ஒப்படைக்கும்படி கேட்டதற்கு பிரதிவாதிகள் மறுத்துவிட்டனர் என்பதும், மேலும் 1 ஆம் வாதியின் கணவர் பொன்னுச்சாமி இறந்ததற்கு பின்னிட்டு வாதிகள் சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.261/2010 என்ற வழக்கினை தபசில் சொத்தினை பொருத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்பதும், மேற்படி வழக்கானது கடந்த 10.11.2014 ஆம் தேதியன்று தபசில் சொத்தில் வாதிகள் குடியிருந்து வரவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்பதும், இந்நிலையில் பிரதிவாதிகள் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் என்ற முறையில் குடியிருந்து வரும் நிலையில் 1 ஆம் பிரதிவாதி தபசில் சொத்தினை 2 ஆம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்து 2 வது தபசில் சொத்திலிருந்து காலி செய்து தர மறுத்ததோடு, 3 வது தபசில் சொத்தினையும் காலி செய்து வாதிகளை கொடுக்க மிரட்டிவருகிறார்கள் என்பதும், எனவே இந்த வழக்கு 1 வது தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரத்திற்காகவும், 2 வது தபசில் சொத்தை பொருத்து சுவாதீன பரிகாரத்திற்காகவும், 3 வது தபசில் சொத்தை பொருத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

8.3. பிரதிவாதிகள் தரப்பு வழக்கு யாதெனில், தபசில் சொத்து பொன்னுச்சாமி ஆசாரிக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேலும் பொன்னுச்சாமி ஆசாரியும், 1 ஆம் வாதியும் சேர்ந்து வாழாமல் திருமண உறவை ரத்து செய்து வாழ்ந்து வந்த நிலையில் 1994 ஆம் வருடம் பொன்னுச்சாமி ஆசாரி 1 ஆம் பிரதிவாதியை கலப்பு திருமணம் செய்து கொண்டார் என்பதும், மேலும் 1 வது தபசில் சொத்தினை பொன்னுச்சாமி ஆசாரி, 1 ஆம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக நன்கொடை கொடுத்து 1 ஆம் பிரதிவாதி தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்தார் என்பதும், பின்னர் பி.வா.சா.ஆ.13 ன் முலம் கடந்த 20.05.2015 ஆம் தேதியன்று 1 ஆம் பிரதிவாதி 1 வது தபசில் சொத்தினை 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்பதும், மேலும் கடந்த 1995 ஆம் ஆண்டு முதலே 1 ஆம் பிரதிவாதி தபசில் சொத்தில் வாய்மொழி நன்கொடையின் அடிப்படையில் வசித்து வந்தார் என்பதும், இந்நிலையில் பொன்னுச்சாமி ஆசாரி மோசடியாக 1 ஆம் பிரதிவாதிக்கு 18.07.2006 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை உற்பத்தி செய்து கொடுத்துள்ளார் என்பதும், மேலும் வாதிகள் ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.2610/2010 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2 ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும், 20.05.2015 ஆம் தேதிய கிரைய ஆவணப்படி தபசில் சொத்தானது 2 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுவிட்டது என்பதால் 3 வது தபசில் சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம், 3 வது தபசில் சொத்தை பொருத்து சுவாதீன பரிகாரமும் வழங்கப்படவேண்டும் என்பதும் ஆகும்.

8.4. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கின் பரிசீலனையிலிருந்து 1 வது தபசில் சொத்தானது பொன்னுச்சாமி ஆசாரியின் குடும்பத்தில் செய்துகொண்ட வா.சா.ஆ.1, 05.09.1976 ஆம் தேதிய பாக கைத்தடி ஆவணத்தின் மூலம் பொன்னுச்சாமி ஆசாரிக்கு கிடைக்கப்பெற்றது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகள் ஆகும். எனவே 1 வது தபசில் சொத்தானது பொன்னுச்சாமி ஆசாரிக்கு பாத்தியப்பட்டது என்பது பொருத்து இருதரப்பிலும் எவ்வித பூசல்களும் கிடையாது.

8.5. **எழுவினா 6 மற்றும் 7 சம்மந்தமாக**

எனவே முதலில் தபசில் சொத்தானது பொன்னுச்சாமி ஆசாரியால் கடந்த 1995 ஆம் ஆண்டு 1 ஆம் பிரதிவாதிக்கு வாய்மொழி நன்கொடையாக கொடுக்கப்பட்டுவிட்டது என்பது 1 ஆம் பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், இதுசம்மந்தமாக வா.சா.ஆ.7, அசல் வழக்கு எண்.261/2010 இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை பரிசீலனை செய்கையில் வாதிகளால், 1 ஆம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மேற்படி அசல் வழக்கு சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி வழக்கிலேயே 1 ஆம் பிரதிவாதியால் 1 வது தபசில் சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு நன்கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதாக சொல்லப்பட்டுள்ளதை பொருத்து விசாரணை நீதிமன்றம் எழுவினா.1 ல் 1 ஆம் பிரதிவாதிக்கு பொன்னுச்சாமி ஆசாரி வாய்மொழி பாகம் கொடுத்து இருந்தார் என்று சொல்லக்கூடியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதாக தீர்வு கண்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. எனவே மேற்படி அசல் வழக்கு எண்.261/2010 ல் பிறப்பிக்கப்பட்ட விசாரணை நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக பிரதிவாதிகள் தரப்பில் தபசில் சொத்தினை பொன்னுச்சாமி ஆசாரி, 1 ஆம் பிரதிவாதிக்கு வாய்மொழி நன்கொடை கொடுத்தார் என்று மீண்டும் கட்சி செய்வதற்கு முரண்தடை செய்யப்பட்டுள்ளார்கள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.6. மேலும் தபசில் சொத்தினை பொன்னுச்சாமி ஆசாரி 1 ம் பிரதிவாதிக்கு வாய்மொழி நன்கொடையாக கொடுத்ததாக சொல்வது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே 1 வது தபசில் சொத்தை பொருத்து 1 ஆம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது. மேலும் 1 ஆம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.13, 20.05.2015 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலமாக 2 ஆம் பிரதிவாதிக்கு 1 வது தபசில் சொத்தினை கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.13, கிரைய ஆவணத்தில் அசல் வழக்கு எண்.261/2010 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் படி பாத்தியம் இருப்பதாக கண்டு 1 ஆம் பிரதிவாதியால், 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம்

கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அசல் வழக்கு எண்.261/2010 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி 1 ஆம் பிரதிவாதிக்கு, பொன்னுச்சாமி ஆசாரியால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் வாய்மொழி நன்கொடை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதாகவே தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதிக்கு, 1 வது தபசில் சொத்தில் உரிமை உள்ளதாக தீர்மானிக்கப்படவில்லை. எனவே 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ.13, 20.05.2015 ஆம் தேதிய கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுக்க எவ்வித உரிமையும் கிடையாது. எனவே பி.வா.சா.ஆ.13 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 1 வது தபசில் சொத்தில் 2 ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் ஏற்படவில்லை. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து 2 ம் பிரதிவாதிக்கு 3 வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.7. மேலும் மேற்கண்ட பரிசீலனையிலிருந்து 2 ம் பிரதிவாதிக்கு 3 வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானித்துள்ள நிலையில், 2 ம் பிரதிவாதிக்கு 3 வது தபசில் சொத்தை பொறுத்து சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.8. **எழுவினா 1 சம்மந்தமாக**

அடுத்ததாக, வாதிகளின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளதை பொருத்து பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1, 10.03.1995 ஆம் தேதிய அறிவிப்பில் கடந்த 1995 ஆம் ஆண்டே பிரதிவாதிகள் தபசில் சொத்தில் உரிமையாளர் என்ற முறையில் குடியிருந்து வருவதாக பொன்னுச்சாமி ஆசாரிக்கு அறிவிப்பு கொடுத்துள்ளனர். மேலும் மேற்படி அறிவிப்புக்கு பொன்னுச்சாமி ஆசாரியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பான பி.வா.சா.ஆ.2, 23.03.1995 ஆம் தேதிய பதில் அறிவிப்பில் 1 ஆம் பிரதிவாதி தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களின் பரிசீலனையிலிருந்து கடந்த 1995 ஆம் ஆண்டு முதலே கடந்த 20 ஆண்டுகளாக 1 ஆம் பிரதிவாதி தபசில் சொத்தில் பொன்னுச்சாமி

ஆசாரியின் உரிமையை மறுத்து தபசில் சொத்தில் உரிமையாளர் என்ற முறையில் அனுபவத்தில் இருந்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் காலவரையறை சட்டம் **பிரிவு 65 ல்** பின்வருமாறு கண்டுள்ளது.

| Article | Suit relating to immovable property | Period of Limitation | Time from which period begins to run |
|---|---|---|---|
| 65 | For possession of immovable property or any interest therein based on title | 12 years | When the possession of the defendant becomes adverse to the plaintiff |

8.9. எனவே மேற்கண்ட காலவரையறை சட்டம் பிரிவின் கீழ் பரிசீலனை செய்கையில், 20 ஆண்டுகள் கழித்து விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.10. **எழுவினா 2 சம்மந்தமாக**

அடுத்ததாக, வாதிகளின் வழக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் பாதிக்கப்பட்டுளளதா என்பதை பொறுத்து பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.3, 09.09.2008 ஆம் தேதியன்று 1 ஆம் வாதியால், பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பில் சொத்தின் சுவாதீனத்தில் இருந்து பிரதிவாதிகள் காலி செய்து தரக்கோரி அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.3 அறிவிப்பில் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் வாதிகளுக்குள்ள உரிமையை மறுத்து குடியிருந்து வந்துள்ளனர் என்பதாக கண்டுள்ளது.

8.11. மேலும் பிரதிவாதிகளால் மேற்படி பி.வா.சா.ஆ.3 அறிவிப்புக்கு அனுப்பப்பட்ட பி.வா.சா.ஆ.4, 18.09.2008 ஆம் தேதிய பதில் அறிவிப்பில் தபசில் சொத்தில் வாதிகளின் உரிமையை மறுத்து ஆக்கிரமித்து குடியிருந்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே வாதிகளால் ஏற்கனவே சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.261/2010 வழக்கு தாக்கல் செய்யப்படும் முன்னரே பிரதிவாதிகளால் வாதிகளின் உரிமை மறுக்கப்பட்டுவிட்டதால் தபசில் சொத்தை

பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவதற்கு வழக்கு மூலம் எழுந்துவிட்டது. ஆனால் வாதிகள் தபசில் சொத்தினை பொருத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டும் மேற்படி வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் விளம்புகை பரிகாரத்தை பின்னிட்டு தனியாக கோருவதற்கு வாதிகளால் நீதிமன்றத்தில் எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை. இந்நிலையில் விசாரணை நடைமுறை சட்டம் **கட்டளை 2 விதி 2 ல்** பின்வருமாறு கண்டுள்ளது...

"1) **Frame of suit**.––––Every suit shall as far as practicable be framed so as to afford ground for final decision upon the subjects in dispute and to prevent further litigation concerning them.

2) **Suit to include the whole claim**. –– (1) Every suit shall include the whole of the claim which the plaintiff is entitled to make in respect of the cause of action; but a plaintiff may relinquish any portion of his claim in order to bring the suit within the jurisdiction of any Court.

(2) **Relinquishment of part of claim** – Where a plaintiff omits to sue in respect of, or intentionally relinquishes, any portion of his claim, he shall not afterwards sue in respect of the portion so omitted or relinquished.

(3) Omission to sue for one of several reliefs – A person entitled to more than one relief in respect of the same cause of action may sue for all or any of such reliefs; but if he omits, except with the leave of the Court, to sue for all such reliefs, he shall not afterwards sue for any relief so omitted.

**Explanation** –––– For the purposes of this rule an obligation and a collateral security for its performance and successive claims arising under the same obligation shall be deemed respectively to constitute but one cause of action.

8.12. எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து தபசில் சொத்தை பொறுத்து ஏற்கனவே எழுந்துள்ள வழக்குமூலத்தின் அடிப்படையில் விளம்புகை பரிகாரம்

கோரப்படாததை பொருத்து பின்னிட்டு தனியாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று கண்டுள்ளது என்பது தெரியவருகிறது.

8.13. மேலும் இதுசம்மந்தமாக Channappa Vs Pararvatewwa, 2026(3) MLJ 594 SC எனும் முன் தீர்ப்பில் முந்தைய வழக்கிலேயே விளம்புகை பரிகாரம் தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் எழுந்துவிட்ட நிலையில் அதனை பொருத்து பரிகாரம் கோரப்படாததால் அதே வழக்குமூலத்தை பொருத்து இரண்டாவது வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு கட்டளை 2 விதி 2ன் கீழ் வழக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்று கண்டுள்ளது.

8.14. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தபசில் சொத்துக்களை பொருத்து முந்தைய வழக்கின் போதே விளம்புகை பரிகாரம் கோருவதற்கு வழக்குமூலம் எழுந்துவிட்ட நிலையில், மேற்படி வழக்கிலேயே விளம்புகை பரிகாரம் கோரப்படாமல் தற்போது இந்த வழக்கில் தபசில் சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் கோருவதற்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் படியிலான தடையினால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**8.15. எழுவினா 3 சம்மந்தமாக**

தற்போது 1வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்பதை பொறுத்து பரிசீலனை செய்கையில், பொன்னுச்சாமி ஆசாரி 1ஆம் வாதிக்கு வா.சா.ஆ.1, 18.09.2006ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 1வது தபசில் சொத்தினை பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் 1ம் வாதி தற்போது வழக்கு நிலுவையில் இருந்து வரும்போது இறந்துபோய்விட்டார். இந்நிலையில் 2ஆம் வாதி ஆனவர் 1ஆம் வாதி மற்றும் பொன்னுச்சாமி ஆசாரியின் சுவீகார புத்திரன் என்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் 2ஆம் வாதி எந்த ஆண்டு 1ஆம் வாதி மற்றும் அவரது கணவர் பொன்னுச்சாமி ஆசாரியால் தத்து எடுக்கப்பட்டார் என்பதாக வழக்குரையில்

எவ்வித சங்கதியும் சொல்லப்படவில்லை. மேலும் 2ம் வாதி தான் 1ம் வாதியின் சுவீகார புத்திரன் என்பதை நிரூபிக்கும் வகையில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எனவே 2ஆம் வாதி சுவீகார புத்திரன் என்பது வாதிகள் தரப்பில் முறையாக நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.16. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து 2ம் வாதியானவர் 1ம் வாதி மற்றும் பொன்னுச்சாமி ஆசாரியின் சுவீகார புத்திரன் என்பது நிரூபிக்கப்பட–வில்லை என்பதாலும், மேலும் முந்தைய எழுவினாக்களில் வாதிகளின் வழக்கானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தீர்வு கண்டுள்ள நிலையில், 1வது தபசில் சொத்தை பொருத்து 2ம் வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.17. **எழுவினா 4 மற்றும் 5 சம்மந்தமாக**

மேலும் 1வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானித்துள்ள நிலையில், 2வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், 3வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.18. எனவே மேற்கண்ட பரிசீலினையிலிருந்து வாதிகளின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகளின் வழக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், 1வது தபசில் சொத்து 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் 2ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், 2வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், 3வது தபசில் சொத்தை பொறுத்து 2ம் வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், 2ம் பிரதிவாதிக்கு 3வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், 2ம் பிரதிவாதிக்கு 3வது தபசில் சொத்தை பொறுத்து

சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்மானித்து திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 1 முதல் 7 க்கு விடையளிக்கப்படுகிறது.

9. **<u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினா .8 க்கான தீர்வு</u>**

**2ம்** வாதி மற்றும் பிரதிவாதிகள்/எதிர்கோரிக்கைதாரர்கள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என மேலே கண்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்களில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், செலவுத்தொகை உட்பட வேறு இதர பரிகாரங்கள் எதுவும் 2ம் வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் வழங்கத் தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே திருத்தியமைக்கப்பட்ட இவ்வெழுவினாவுக்கு தீர்வு காணப்படுகிறது.

10. **இறுதியாக,** வாதிகளின் வழக்கு மற்றும் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை பாத்தியம் தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 22–ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.07.22 20:08:25 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>1. வாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

1. திருமதி.சரஸ்வதி (1ம் வாதி)
2. திரு.அய்யப்பன் (2ம் வாதி)

**<u>2. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

1. திருமதி. மனோன்மணி (1 ஆம் பிரதிவாதி)
2. திரு.குருசாமி (2ம் பிரதிவாதி)

**<u>3. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.09.1976 | ஆம் தேதிய கைத்தடி பாக பத்திரம் |
| வா.சா.ஆ.2 | 18.09.2006 | ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் |
| வா.சா.ஆ.3 | ---- | தீர்வை ரசீதுகள்.6 |
| வா.சா.ஆ.4 | ---- | மின்சார கட்டணம் ரசீதுகள்.6 |
| வா.சா.ஆ.5 | ---- | குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| வா.சா.ஆ.6 | ---- | 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| வா.சா.ஆ.7 | 10.11.2014 | ஆம் தேதி அசல் வழக்கு எண்.261/2010ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை நகல் |
| வா.சா.ஆ.8 | 10.11.2014 | ஆம் தேதி அசல் வழக்கு எண்.261/2010ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நகல் |
| வா.சா.ஆ.9 | | பிராது மாதிரி வரைபடம் |
| வா.சா.ஆ.10 | 28.03.1995 | 2ம் வாதியின் தந்தை தபசில் சொத்தை பொறுத்து தெரிவித்து நெல்லை கதிரவன் நாளிதழில் பிரசுரம் செய்த மறுப்பு அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.11 | 14.03.2004 | 2ம் வாதியின் தந்தை பொன்னுச்சாமி ஆசாரி தளவாய்புரம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் இரசீது |
| வா.சா.ஆ.12 | 16.02.2010 | 2ம் வாதியின் தந்தை பொன்னுச்சாமி ஆசாரிக்கு கலைஞர் காப்பீட்டு திட்டத்தில் வழங்கப்பட்ட உறுப்பினர் அட்டை ஒளிநகல் மற்றும் மேற்படி அட்டையின் உறுப்பினர் விபரத்திற்கான ஆன்லைன் நகல் |
| வா.சா.ஆ.13 | ---- | 2ம் வாதியின் வாக்காளர் அடையாள அட்டை ஒளிநகல் அசடன் ஒப்பிடப்பட்டது |
| வா.சா.ஆ.14 | ---- | 2ம் வாதியின் தந்தை பொன்னுச்சாமி ஆசாரிக்கு 1988ம் ஆண்டு முதல் 1992ம் ஆண்டு வரை காலத்தில் வழங்கப்பட்ட பழைய குடும்ப அட்டை ஒளிநகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| வா.சா.ஆ.15 | ---- | 2ம் வாதிக்கு வழங்கப்பட்டுள்ள புதிய ஸ்மார்ட் கார்டு ஒளிநகல் மற்றும் உறுப்பினர்கள் விபரத்திற்கான ஆன்லைன் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 10.03.1995 | 1ம் பிரதிவாதி 2வது கணவர் பொன்னுச்சாமி ஆசாரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 23.03.1995 | 1ம் பிரதிவாதியின் கணவர் பொன்னுச்சாமி ஆசாரி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 09.09.2008 | 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 18.09.2008 | 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் |
| பி.வா.சா.ஆ.5 | ---- | 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பை 1ம் வாதியின் வழக்கறிஞர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |
| பி.வா.சா.ஆ.6 | ---- | 1ம் பிரதிவாதி மின் இணைப்பு எண்.229க்கு செலுத்திய மின் கட்டண ரசீதுகள் (13) அசல் |
| பி.வா.சா.ஆ.7 | ---- | 1ம் பிரதிவாதி பிராது சொத்திற்கு செலுத்திய வீட்டுவரி ரசீதுகள் 2 அசல் |
| பி.வா.சா.ஆ.8 | ---- | 1ம் பிரதிவாதிக்கு தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து வந்த கடிதம் அசல் |
| பி.வா.சா.ஆ.9 | ---- | 1ம் பிரதிவாதிக்கு இந்திய தேர்தல் ஆணையர் வழங்கிய வாக்காளர் அடையாள அட்டை ஜெராக்ஸ் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| பி.வா.சா.ஆ.10 | ---- | 2008ஆம் ஆண்டிற்கான 220, வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பட்டியல் நகல் |
| பி.வா.சா.ஆ.11 | ---- | 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| பி.வா.சா.ஆ.12 | ---- | 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட ஆதரவற்றோர் உதவி தொகைக்கான உத்தரவு நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.13 | 20.05.2015 | 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு பிராது 1ம் தபசில் சொத்தை முழுவதையும் பொறுத்து எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவளார் சரக கணினி வழி நகல் |

MAHINDRAVARMA P Digitally signed by MAHINDRAVARMA P Date: 2026.07.22 20:08:34 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

---

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அசல் வழக்கு எண்.115/2015**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 22.07.2026**

---